[திரு. க, அன்பழகன்] [1981 ஆகஸ்ட் 27

[பிற்பகல் 1.30]

விநியோகிப்பதில் முன்னால் ஸ்டாக் செய்த அரிசியை முன்னாலும் பின்னால் வந்தால் பின்னும் விநியோகிக்கும் முறையைப் பொது விநியோகத்துறை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு செய்யாமல் பழைய ஸ்டாக் தங்கி இருந்தால் அது புழுத்துப்போகத்தான் செய்யும்; மக்கிப் போகத்தான் செய்யும். எனவே சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் அந்தநிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) வெள்ளை அறிக்கையின் மீதான விவாதம் தொடர்வது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது ஒன்றரை மணி கடந்துவிட்டது. மேலும் அவையின் நேரத்தை நீட்டிக்க வேண்டுமா அல்லது நாளை மீண்டும் விவாதத்தைத் தொடரலாமா? நாளை துணை மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடைபெற்று, சரியாக ஒரு மணிக்கு விவாதத்தை முடித்துக்கொள்ள வேண்டும். நாளை மாலையிலும் பேரவைக் கூட்டம் இருக்கிறது. ஆகவே, நம்முடைய அலுவல்களை எவ்வாறு அமைத்துக்கொள்வது என்று அவையின் கருத்தறிய விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா: எதிர்க்கட்சித் துணைத் தலைவரின் உரையுடன் இன்றைக்கு முடித்துக்கொள்ளலாம் நாளை மாலையும் செஷன் இருப்பதால் பதில் உரையை நாளை வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை சரியாக ஒரு மணிக்கு 'கில்லட்டின்' இருப்பதால் கேள்வி நேரத்தை ஒத்திவைத்துக் கொள்ளலாமா? இல்லை என்றால் இன்றைக்கு இன்னும் ஒரு மணி நேரம் நீட்டிக்கவேண்டும்.

திரு. என். சங்கரய்யா: ஒத்திவைப்புத் தீர்மானம் முக்கியமானது. ஆகையால் நாளை கேள்வி நேரம் இல்லாவிட்டாலும் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நாளை கேள்வி நேரம் இல்லாமல், ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம். அதற்குப் பின் துணை மானியக் கோரிக்கைகளுக்கு முன்னால் வெள்ளை அறிக்கை மீதான பதில் உரையை வைத்துக்கொள்ளலாம். அல்லது ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்தவுடன் துணை மானியக் கோரிக்கைகளை எடுத்துக்கொண்டு, ஒரு மணிக்கு விவாதத்தை முடித்துக்கொண்ட பின்னால் வெள்ளை அறிக்கை மீதான பதில் உரையை வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று பேராசிரியர் உரை முடிந்தவுடன் அவை ஒத்திவைக்கப்படும். நாளை கேள்வி நேரம் இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்த பிறகு வெள்ளை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதில் உரை; அதன் பிறகு துணை மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

7. அரசினர் தீர்மானங்கள்—(ஆ) தொடர்ச்சி.

திரு. க. அன்பழகன்: எனவே, மத்திய அரசு மீது குறையைச் சொல்லி, அதன் மூலம் மாநில அரசு பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்ற முயற்சி நல்லது அல்ல. மத்திய அரசு எப்படி விலைவாசி உயர்வுக்குக் காரணமாக இருந்தாலும் நமக்குக் கிடைக்கிற வாய்ப்புகளைப் பயன்படுத்தி மக்களுக்கு நன்மை செய்கின்ற வகையில் பொது விநியோக முறை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும், செம்மைப்படுத்தப்பட வேண்டும், அதற்கு வேண்டிய வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு இந்த வெள்ளை அறிக்கை மீதான என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 28-8-81-ந்தேதி காலை 9 00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படியான விதிகளும், ஆணைகளும்.

90. 24.6.1950 ஆம் நாளன்று முன்னாள் சுகாதாரத் துறையில் உருவாகி, 10.10 1950 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் 1-ஏ-ல் 407-408 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட 463 ஆம் எண் அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்ட சென்னை மாநகரின் செனாய்நகர் நகர அமைப்புத் திட்டத்தின் சில வேறுபாடுகளை செய்தல் குறித்து [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

91. கிண்டியிலுள்ள சென்னை குதிரைப் பந்தயத் திடலுக்குள் நடைபெறும் மைசூர், உதகமண்டலம், பெங்களூர், ஹைதராபாத், பம்பாய், பூனா மற்றும் கல்கத்தா ஆகிய உள்நாட்டுப் பந்தயங்கள் மீது சில குறிப்பிட்ட வரிகள் விதிப்பது குறித்து 1-7-1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய